# 1. நுகர்வோர் இயல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் அல்லது நுகர்வோர் இயலின் படிப்படியான முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி

# [CONSUMERISM AND CONSUMER PROTECTION MOVEMENT] OR [EVOLUTION AND DEVELOPMENT OF CONSUMERISM]

**(மிகவும் முக்கியம்)**

**பாடச்சுருக்கம்: (SYNOPSIS)**

அ. நுகர்வோர் இயல்

ஆ. சர்வதேச அளவில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம்

இ. நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் – வரலாற்றுப் பார்வை

ஈ. அமெரிக்காவில் நுகர்வோர் இயக்கம்

உ. இங்கிலாந்தில் நுகர்வோர் இயக்கம்

ஊ. சர்வதேச நுகர்வோர் இயக்கம் (ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இதர அமைப்புகளின் மூலமாக)

1. பொருளாதார மற்றும் சமூக சபை
2. சர்வதேச தொழிலாளர் அமைப்பு
3. உலக சுகாதார நிறுவனம்
4. உணவு மற்றும் விவசாய அமைப்பு



எ. இந்தியாவில் நுகர்வோர் இயக்கம் (இந்தியாவில் நுகர்வோர் இயக்கத்தின் மந்தமான வளர்ச்சிக்கு காரணங்கள்)

ஏ. முடிவுரை

## அ. நுகர்வோர் இயல்: (CONSUMERISM)

நுகர்வோர் இயல் எனப்படுவது விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு இடையிலான தொடர்பில், நுகர்வோரின் உரிமைகள் மற்றும் அதிகாரங்களை பாதுகாத்திட ஏற்பட்ட ஓர் இயக்கமாகும்.

1960 மற்றும் 1970ம் ஆண்டுகளில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் வழிகாட்டியாக திகழ்ந்த "ரால்ப் நாடர்" அவர்களின் கூற்றுப்படி நுகர்வோர் இயல் எனப்படுவது தரமான வாழ்க்கை மற்றும் மனித வாழ்க்கையைப் பாதுகாத்தல், பேணுதல், மேம்படுத்துதல் முதலியவற்றுக்கு ஒரு சமுதாயத்துக்குரிய உரிமையாகும்."

விற்பனையாளர்களால் விற்கப்படும் பொருட்கள் பொதுநலம் மற்றும் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்காத வரை, அப்பொருட்களை பொது விற்பனை செய்ய முடியும்.

நுகர்வோர் இயல் என்பது வியாபாரிகளின் பொருளாதார சுரண்டலிலிருந்து தற்காத்துக் கொள்வதையும், விவேகமான மற்றும் நியாயமான முறையில் பொருட்களை வாங்குதலையும் உள்ளடக்கியதாகும்.

## ஆ சர்வதேச அளவில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம்: [CONSUMER PROTECTION MOVEMENT -INTERNATIONAL LEVEL]

சர்வசே அளவில் வியாபாரம் மற்றும் வணிகம் அதிகரித்ததன் காரணமாகவே, உலக அளவில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கங்கள் தோன்றின.

20ம் நூற்றாண்டில் பலநாடுகளில் பாராட்டத்தக்க வகையில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் வளர்ச்சியைக் கண்டது.

பெரும்பாலான நுகர்வோர்கள் குறைந்த வருவாய் பிரிவினரை சார்ந்தவர்களாதலால், அவர்களுக்குத் தேவையான தரமான அடிப்படைப் பொருட்கள் சரியான விலைக்குக் கிடைப்பதில்லை. வளரும் நாடுகளில் நுகர்வோர் பாதுகாப்பு என்பது ஏட்டுப்படிப்பு என்பதைவிட மக்களின் தேவை கருதியே முக்கியத்துவம் பெற்றுள்ளது.

எனவேதான் தற்போது நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் வேகமாகப் பரவும் வகையில் அதன் வளர்ச்சியினை சட்டத் திருத்தங்கள், நுகர்வோர் நீதிமன்றங்கள், நுகர்வோர் உரிமைகள் தொடர்பான விளம்பரங்கள் விரைவுபடுத்தியுள்ளன.

நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் மனித வாழ்க்கைத்தரத்தின் மேம்பாட்டிற்கும், அபாயகரமான கலப்படப் பொருட்களுக்கெதிரான பாதுகாப்பிற்கும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

## இ. நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் — வரலாற்றுப்பார்வை: [CONSUMER PROTECTION MOVEMENT-HISTORICAL PERSPECTIVE]

இங்கிலாந்து தொழிற்புரட்சிக்கு முன்னதாக, நாடுகள் பிரித்து தனியாக இருந்தமையாலும், போக்குவரத்து வசதி போதிய அளவு இன்மையாலும் அனைத்துப் பொருட்களும் மனிதர்களாலேயே



உருவாக்கப்பட்டதன் விளைவாக நுகர்வோர் இயல் அவ்வளவாக உணரப்படவில்லை.

அநேக நாடுகளின் பொருளாதாரமானது விவசாய வருவாயை நம்பி உள்ளதால் அங்கெல்லாம் நுகர்வோர் பாதுகாப்பின் தேவை அவ்வளவாக உணரப்படவில்லை.

நுகர்வோர் இயல் குறித்த ஒரு சில வழக்குகளின் சாதாரணமான உரிமையியல் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்பட்டன. இத்தீர்ப்புகளிலிருந்து எந்தவொரு சட்டக் கோட்பாடுகளும் உருப்பெறவில்லை.

பழங்காலத்திய ரோம் நகரத்தில் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. இடைக்காலத்தில் பல ஐரோப்பிய நாடுகளில் வணிகர்களுக்கான நுகர்வோர் தரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

மட்டமான பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்கள் அவர்களது ஆடைகளால் கழுத்தில் கட்டப்பட்டு நகரைச் சுற்றி இழுத்து வரப்பட்டனர்.

இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்கு பின்னர் மட்டுமே பல்வகையான விதவிதமான பொருட்கள் மற்றும் சரக்குகள் நுகர்வோருக்கு கிடைக்கப்பெற்று நுகர்வோர் இயல் (Consumerism) உதயமாகத் தொடங்கியது

இருந்தபோதிலும், இங்கிலாந்து நாட்டின் 1893ம் வருடத்திய ஆங்கிலேய பொருட்கள் விற்பனைச்சட்டம், நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான அம்சங்கள் எதுவும் இல்லாத இங்கிலாந்து பொதுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

உண்மையில் “வாங்குபவர் விழித்திரு” (Let the buyer beware) என்ற அடிப்படையில் வணிகம் நடந்துவந்தது. எனவே விற்பனையாளர்க்கு விற்கும் பொருட்களின் குறைபாட்டுக்கு எந்தப் பொறுப்பும் இல்லாதநிலை இருந்தது.

எனினும் 20ம் நூற்றாண்டில்தான் உண்மையான நுகர்வோர் இயக்கம் தொடங்கியது.

இரண்டாம் உலகப்போருக்கு பின் வருடங்களில் பெண்கள் அமைப்புக்களின் தன்னார்வ செயல்முறைகள் நுகர்வோர் இயக்கம் வளர தூண்டுதலாக அமைந்தது.

நுகர்வோர்களது குறைகளை களைத்திட 1955ம் வருடத்தில், ஆங்கில தொழிலாளர் கட்சி மக்களவையில் “நுகர்வோருக்கான போர்” என்ற சிறிய வடிவிலான புத்தகத்தை வெளியிட்டது. மேலும் “நுகர்வோர் குழுமங்களை” ஏற்படுத்தி தரமான பொருட்களை சந்தைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக “சில்லறை தர விற்பனை நிறுவனம்” ஒன்று சில்லறை விற்பனையிலான தாவாக்களை தீர்க்கும் பொருட்டு நிறுவப்பட்டது.

ஆயினும் நுகர்வோர் புரட்சி இங்கிலாந்தில் வேகமாக வளராததன் காரணமாக அரசாங்கம் “மேலோனி” என்ற குழுவை நியமனம் செய்தது. இந்த குழு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யும் பொருட்டு நுகர்வோர் பாதுகாப்பு குறித்தும் பொருட்களின் தர நிர்ணயம், செயல்பாட்டு தன்மை மற்றும் சேவை தரம் சம்பந்தப்பட்ட அறிக்கையினை சமர்ப்பிக்க அமைக்கப்பட்டது.

“மேலோனி” குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், இங்கிலாந்து அரசு 1963ம் வருடம் “நுகர்வோர் குழுமம்” ஏற்படுத்தி நுகர்வோர்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு வழிசெய்தது.



இந்த நிலையில் தான் “நுகர்வோர் விழுத்திரு” என்ற நிலைமை மாறி “விற்பனையாளர் ஜாக்கிரதை” என்ற முழக்கம் மேலோங்கியது.

உணவு மற்றும் மருந்துகள் சட்டம் 1955, எடை மற்றும் அளவுகள் சட்டம் 1963, விற்பனை விளக்கச்சட்டம் 1972, நஞ்சுகள் தொடர்பான 1972 சட்டம், நேரிய வணிகச் சட்டம் 1973, விலைகள் சட்டம் 1974, போட்டிச் சட்டம் 1980 ஆகியன நுகர்வோரின் பாதுகாப்பு மற்றும் நலன்குறித்து இயற்றப்பட்ட முக்கியமான சட்டங்களாகும்.

1987ம் வருடத்திய நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் மிகவும் பயனுடையது. இச்சட்டம் மிகவும் விரிவான நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான வழிமுறைகள், நியாயமற்ற வணிகத்தினை தடை செய்தல் தரமான பொருட்கள், மற்றும் சேவையை பெறத்தகுந்த விலைகளில் கிடைக்கச்செய்தல், தனிநபர் கையில் வர்த்தக உரிமைகள் தருவதை தடை செய்தல், ஒருதலைப்பட்சமான தன்னுரிமை மறுக்கின்ற ஒப்பந்தங்களை நீக்குதல் மற்றும் நுகர்வோரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை பாதுகாத்திடும் வகையில் நுகர்பொருள் மற்றும் சேவையினை தேர்வு செய்தல் முதலான அம்சங்களைக் கொண்ட சட்டமாகும்.

இங்கிலாந்தில் ஏற்பட்ட நுகர்வோர் இயக்கத்திற்கு இணையாக ஜப்பான் நாட்டிலும் அதிவேக பொருளாதார வளர்ச்சி காரணமாக பல்வேறு நிர்வாக மற்றும் சட்ட பூர்வ நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டது.

ஜப்பானில் 1968ம் வருடம், நுகர்வோர் பாதுகாப்புக்காக ஒரு சட்டம் இயற்றப்பட்டு அதற்கென ஒரு ஆணையமும் நிறுவப்பட்டு, ஆணையம் நாட்டின் பிரதம மந்திரியிடம் நேரடியாக அறிக்கை அளிக்குமாறு வகை செய்யப்பட்டது. அரசின் சட்டமானது உள்ளாட்சி மற்றும் நகராட்சி அமைப்புக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இவ்வாறு ஜப்பான் நாட்டில் அரசாங்கத்தினை அதிகார பூர்வமான நடவடிக்கைகளின் முலமாக, மிகவும் வலுவான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் அமையப்பெற்றதுடன். தற்பொழுது நுகர்வோரே வழிநடத்திடவும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பெரிய அளவில் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் வேகமாக வளர்ச்சியுற்றுள்ளன.

நியூசிலாந்து நாட்டில், 1957ம் ஆண்டு, தொழில் மற்றும் வணிக அமைச்சகத்தின்கீழ் ஒரு நுகர்வோர் குழுமமும், 1966ம் ஆண்டு ஒரு நுகர்வோர் நிறுவனமும் ஏற்படுத்தப்பட்டது.

இந்த அமைப்புக்களின் நோக்கம் தரமான பொருட்களை சந்தைப்படுத்த செய்தல், பெருட்களின் தரத்தினை பரிசோதனையிடச் செய்தல் மற்றும் குறைபாடில்லாத சேவை வழங்க செய்தல் முதலானவாகும். உற்பத்தியாளர்கள் பொருட்களின் தரத்தையும், சேவையையும் மேம்படுத்திட பொருட்களின் தரபரிசோதனை முடிவுகள் வந்த பத்திரிக்கைகள் மற்றும் செய்தி இதழ்கள் காரணமாக இருந்தன.

ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பாவின் அநேக நாடுகளில் 1980ம் வருடத்திற்கு பின்னரே இதுபோன்ற இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் ஸ்வீடனில் 1950ம் ஆண்டு தொடக்கத்திலேயே கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் இருந்துள்ளன.

1. தேசிய நுகர்வோர் தகவல் நிறுவனம்.

2. நுகர்வோர் நலனுக்கான அமைச்சகம்.

3. மாநில நுகர்வோர் குழுமம்.

நுகர்வோர் இயக்கம் இங்கிலாந்தில் தொடங்கியிருந்தாலும் இதற்கான முக்கியப் பங்களிப்பு அமெரிக்காவிலிருந்தே வந்தது. எனவே, நுகர்வோர் சங்கங்களில் இந்நாட்டினது சங்கங்களே மிக முன்னேறியதாகக் கருதப்படுகின்றன.



எனவே அமெரிக்காவில் இவ்வியக்கம் எவ்வாறு உருவானது, இயங்கியது என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## ஈ. அமெரிக்காவில் நுகர்வோர் இயக்கம்:
**(CONSUMER MOVEMENT IN USA)**

அமெரிக்காவில் 1890ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட “ஷெர்மான் சட்டம்” “வர்த்தக கட்டுப்பாடு ஒப்பந்தத்தினை” சட்ட விரோதம் என அறிவித்தது. மேலும் “கூட்டாட்சி வர்த்தக ஆணையம் சட்டம் மற்றும் கிளேடன்ஸ் சட்டம் 1914” முலமாக நியாமற்ற வர்த்தகப் போட்டியினை தடுத்தது.

“வீலா லீ சட்டம் 1938” மூலமாக கூட்டாட்சி வர்த்தக ஆணையத்தின் அதிகாரத்தினை விரிவுபடுத்தியது. ஆனாலும் 1960ம் ஆண்டுவரை நுகர்வோர்கள் இறையாண்மை அற்றவர்களாகவும், நேர்மையற்ற வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டு உதவியற்றவர்களாகவும் இருந்து வந்தார்கள்.

1970ம் ஆண்டு அமெரிக்க தேசம் எரிசக்தி பிரச்சனையால் கடும் நெருக்கடியில் சிக்கியபோது “போர்டு”(Ford) எனப்படும் பெரிய கார் உற்பத்தி நிறுவனம் கடும் கண்டனத்திற்கு ஆளானது.

1960 மற்றும் 1970களில் “ரால்ப் நாடர்” என்பவர் நடத்திய “ஒரு நபர் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கமே” நுகர்வோர்களின் ஆதரவற்ற நிலையினை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.“நுகர்வோர் இறையாண்மையுடையார்” என்ற வாசகம் அவரால் உருவாக்கப்பட்டு, அவரது இயக்கமும் பெருகி வளரத் தொடங்கியது.

செவ்ரோலெட் (Chevrolet) மோட்டாரின் குறைகள் தொடர்பான அவரது ஆழ்ந்த கருத்துக்களும், அதிசயத்தக்க முடிவுகளும் நகரெங்கிலும் பேசப்பட்டு நுகர்வோர்களின் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு சட்டங்கள் ஏற்படுத்திட வழிவகுத்தது.

அவரது இயக்கம் அமெரிக்க நுகர்வோர் இயக்கத்தில் "ரால்ப் நாடரின் இயக்கம்" என்றே அழைக்கப்பட்டது.

1975ம் வருடத்தில் மேக்நூஸன்—மோஸ் உத்தரவாதச்சட்டம் (Magnuson-Moss Warranty Act) நுகர்வோர் பாதுகாப்பிற்கென்று கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் தோன்றிட காரணமாக இருந்தது.

1. ஏமாற்றும் இயல்புடைய விளம்பரங்களைத் தடை செய்யும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு.

2. ஆரோக்கியமான மற்றும் தரமான போட்டிகளை மேம்படுத்தும் "போட்டிக்கான அமைப்பு".

தற்பொழுது "சீரான நுகர்வோர் விற்பனை நடைமுறைச் சட்டம்", சீரான குடியிருப்புப் பகுதிகள் உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் சட்டம்", "நுகர்வோர் உணர இயலாத சகிப்புத்தன்மை மற்றும் பாதுகாப்பு சட்டம்" "நியாயமாக அடுக்குதல் மற்றும் பெயர்சீட்டு ஒட்டுதல் சட்டம்" "சீரான நில மாற்று நடவடிக்கைச் சட்டம்" போன்ற எண்ணிலடங்கா சட்டங்கள் இயற்றியுள்ளதன் மூலம், அமெரிக்கா நுகர்வோர் இயலின் (Consumerism) அரசனாக திகழ்கிறது.

கடுமையான போட்டிகளின் விளைவாக பல்வகையான பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றிடவும், சட்டபூர்வ தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நுகர்வோர்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் ஏதுவாகியது.

## உ. இங்கிலாந்தில் நுகர்வோர் இயக்கம்:

**(CONSUMER MOVEMENT IN GREAT BRITAIN)**

**(இதற்கு 'இ' பிரிவில் உள்ள வரலாற்றுப்பார்வை பகுதியை பக்கம் 3ல் பார்க்கவும்)**



## ஊ. சர்வதேச நுகர்வோர் இயக்கம் (ஐக்கிய நாடுகள் மற்றும் இதர அமைப்புக்களின் முலமாக):

**[INTERNATIONAL CONSUMER MOVEMENT] (THROUGH U.N.O AND OTHER AGENCIES)**

1945ம் ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றானது ஒவ்வொரு நாடும் "காவல் அடக்குமுறை நாடாக" இல்லாமல் "நலம் பேணும் நாடாக" உருவாக வேண்டும் என்பதேயாகும்.

உச்சக்கட்ட வேகத்தில் வளர்ச்சியடைந்துள்ள சர்வதேச தொழில் மற்றும் வர்த்தகத்தின் சூழலில், ஐக்கியநாடுகள் சபை மற்றும் இதர சர்வதேச அமைப்புக்களின் பங்கானது மிகவும் முக்கியமானது. சர்வதேச தொழில் மற்றும் வார்த்தகத்தினை நெறிமுறைப்படுத்தவும், நுகர்வோர்களுக்கான நலன்களில் சிறப்புக் கவனம் செலுத்துவதிலும் இந்த அமைப்புகளின் பங்கு முக்கியமெனக் கருதப்பட்டது.

நுகர்வோர் பாதுகாப்புக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நெறிமுறைகள், நுகர்வோர் நலனைப் பாதுகாப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என கூறின. ஏனெனில் நுகர்வோர் பாதுகாப்பு என்பது ஒரு நாட்டை மட்டும் சார்ந்ததல்ல.

நுகர்வோர் பாதுகாப்புக்காக சர்வதேச தரத்தினை மேம்படுத்துவது அவசியமாகிறது. நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நாடுகளுக்கிடையேயான முரண்பாட்டினை களைந்திட இந்த அமைப்புகள் உதவுகின்றன.

மேலும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் சம்பந்தமான தகவலை இறக்குமதி செய்யும் நாடுகள் பரிமாறிக்கொள்ளவும், அத்தகைய பொருட்களை இறக்குமதி செய்யாமல் பாதுகாத்திடவும் சர்வதேச கூட்டு நடவடிக்கை அவசியமானது.

ஐக்கியநாடுகள் சபையானது அதன் அரசியலமைப்பின்படி கீழ்க்கண்ட நான்கு முக்கிய அமைப்புக்களை உள்ளடக்கியுள்ளது. அவைகள்:

பொருளாதார மற்றும் சமூக சபை, சர்வதேச தொழிலாளர் அமைப்பு, உலக சுகாதார நிறுவனம் மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு முதலானவாகும். இந்த அமைப்புகளின், பங்கானது நுகர்வோரிய இயல் வளர்ச்சிக்கு பெரிய அளவில் பங்களித்திருக்கின்றன.

## 1. பொருளாதார மற்றும் சமூக சபை:
**(Economic and Social Council)**

ஐக்கிய நாட்டு சபையின் 6 அமைப்புகளில் ஒன்றான இச்சபை, வாழ்க்கைத்தர பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி, சர்வதேச பொருளாதார, சமூக, ஆரோக்கியம் மற்றும் இதர பிரச்சனைகள் தொடர்பான தீர்வுகள் ஆகியவற்றை மேம்பாடு அடையச் செய்கிறது.

19ம் நூற்றாண்டின் இறுதியில், இந்த சபை நுகர்வோர் பாதுகாப்பின் அவசியத்தினை உணர்ந்து, பலநாடுகளில் உள்ள பல்வேறு அமைப்புகளிடம் நுகர்வோர் இயல் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டது.

மேலும் இந்த சபை ஒவ்வொரு நாட்டிலும் நுகர்வோர் நலன் குறித்து வழிகாட்டுதல்களை ஏற்படுத்திடவும் அதனை அமல்படுத்துமாறும் அறிவுறுத்தியது.

1982ம் ஆண்டில், இச்சபை நுகர்வதற்கு தடைசெய்யப்பட்ட பொருட்களுக்கு எதிராக நுகர்வோரை பாதுகாத்திட தீர்மானம் நிறைவேற்றியது. 1983ம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புக்காக இச்சபை மாதிரி வழிகாட்டலை ஐக்கிய நாடுகளின் பொதுசபைக்கு சமர்ப்பித்தது. அவ்வழிகாட்டலை, பொதுசபை 1985ம் ஆண்டு தீர்மானமாக நிறைவேற்றியது.



வழிகாட்டுதலின் முக்கிய சரத்துக்கள் யாதெனில், உலகளாவிய நுகர்வோர் இயலை ஊக்குவிப்பது, குறைந்த விலையை ஏற்படுத்தும் வகையில் நிறைய பொருள் வகைகளை ஏற்படுத்துதல், நியாயமற்ற வணிக முறைகளை தடைசெய்தல், சர்வதேச அளவில் நுகர்வோர் இயலை வளர்ச்சியுறச் செய்தல், உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவற்றிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல் மற்றும் பயனுடன் கூடிய சட்ட ரீதியான தீர்வுகளை குறைந்த செலவில் நுகர்வோருக்கு கிடைக்கச்செய்தல், முதலானதாகும்.

1986ம் ஆண்டு பொதுச்சபையின் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான தீர்மானத்தின் வாயிலாக, நுகர்வோர்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்களிலிருந்து அவர்களின் ஆரோக்கியத்தை பேணுவது, பொருட்கள் தொடர்பான செய்திகளை தேவையான அளவுக்கு அளிப்பது, ஏமாற்றும் வகையில் சித்தரிக்கப்படும் விளம்பங்களைத் தடைசெய்வது, நுகர்வோர் கல்வியை பரப்புவது மற்றும் பயனுள்ள தீர்வுகள் நுகர்வோருக்கு கிடைக்கச் செய்வதென முடிவெடுக்கப்பட்டது.

மேற்கண்ட வழிகாட்டுதல்களை அடிப்படையாக ஏற்றுக்கொண்டு பல நாடுகள் அவற்றை நடைமுறைப்படுத்தின. இந்தியாவிலும் 1986ம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டது

## 2. சர்வதேச தொழிலாளர் அமைப்பு:
**(International Labour Organisation)**

இதன் நோக்கமானது தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் பாதுகாப்பு, அவர்களுக்கு அடிப்படைக்குத் தேவையான பொருட்களை நியாயவிலையில் திருப்திகரமான தரத்திலும் தேவையான அளவிலும் கிடைக்கச் செய்வதாகும். மேலும் நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகளை பலப்படுத்தவும், தொழிலாளர்களுக்கு கல்வி கிடைத்திட செய்யவும், அவர்களது பணியிடத்திலேயே நலத்திட்டங்கள் கிடைத்திட செய்யவும் பல திட்டங்களை வகுத்தது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் பல்வேறு நாடுகளால் பின்பற்றப்பட்டு பின்னர் தொழிலாளர் சட்டங்களாக உருவாகியது.

### 3. உலக சுகாதார நிறுவனம்:

**(WORLD HEALTH ORGANISATION)**

1977ம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் நிபுணர் குழுவானது மக்களின் அடிப்படையான ஆரோக்கியத்திற்கு அவசியமான மருந்துகளின் பட்டியலைத் தயாரித்து அதன் உறுப்பு நாடுகள் அந்த மருந்துகளை நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்கிட வகைசெய்தது. எனவே இதன் முக்கிய நோக்கம் மக்கள் நல்ல ஆரோக்கியமாக வாழ வழி செய்வதாகும்

### 4. உணவு மற்றும் விவசாய அமைப்பு:

**(FOOD AND AGRICULTURE ORGANISATION)**

இந்த அமைப்பு, உணவுக்கட்டுப்பாடு மற்றும் தரமான உணவுப் பொருட்களின் தயாரிப்பினை அதிகப்படுத்துவது தொடர்பாக சிறப்புத் திட்டங்களை தீட்டியது.

இவ்வமைப்பு மக்கட்தொகைக்கு ஏற்றாற்போல உணவுப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுவதையும், குறிப்பாக கிராம மக்களுக்குச் சென்றடைவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. பூச்சி மருந்துகள் தயாரித்தல் மற்றும் அவற்றை பகிர்ந்தளித்தல் தொடர்பான நெறிமுறைகளை இது தயாரித்தது.

ஐக்கிய நாட்டின் மற்ற அமைப்புகளாகிய வர்த்தக மற்றும் வளர்ச்சி மாநாடுகள், ஐக்கியநாடுகள் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியமைப்பு போன்ற அமைப்புக்களும் நுகர்வோர் இயல் வளர்ச்சிக்கு முக்கியப்பங்குகள் வகித்தன.



### எ. இந்தியாவில் நுகர்வோர் இயக்கம் (இந்தியாவில் நுகர்வோர் இயக்கத்தின் மந்தமான வளர்ச்சிக்கு காரணங்கள்): (CONSUMER MOVEMENT IN INDIA ( Causes for slow development of consumer movement in India)

பண்டைய இந்தியாவில், நுகர்வோர்கள் பண்டமாற்று முறை மூலம் அவர்களுக்குள் பொருட்களை மாற்றிக் கொண்டனர். சமூக வளர்ச்சி மற்றும் ஏராளமான பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டதன் விளைவாக பண்டமாற்று முறை மாறி விற்பனை மற்றும் வாங்குதல் என்ற நடைமுறை தோன்றியது.

கல்வியறிவின்மை, ஏழ்மை, தகவலின்மை, மக்களின் எளிமையான தேவைகள் போன்ற காரணங்களால் நுகர்வோர் தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே இருந்தது. இன்று கூட, ஒரு பொருளை வாங்குவதற்கு வாங்குபவர் அவருடைய தனிப்பட்ட முன் அனுபவம், அவரது நண்பர்கள் தரும் தகவல் அல்லது சுதந்திரமான வணிக அமைப்புகளையே சார்ந்துள்ளார்.

பொருட்களை தேர்வு செய்வதில் பொருட்கள் தொடர்பான தகவல் இடைவெளியே நுகர்வோருக்கு மிகவும் கேடு விளைவிக்ககூடியதாக உள்ளது. புதிதான தொழில் நுட்பம் சார்ந்த பொருட்கள் சம்பந்தப்பட்ட வகையில் நுகர்வோர் விற்பனையாளர் அல்லது உற்பத்தியாளரையே முழுமையாக நம்ப வேண்டியுள்ளது.

மேலும் விலை உயர்வினைக் கட்டுப்படுத்தும் வகையிலான கடுமையான சட்டங்களோ, விரைவான தீர்ப்பு வழங்கும் வகையிலான, குறைதீர்க்கும் அமைப்புகளோ இல்லை. மோசடியால், அதிகம் பாதிக்கப்படுபவர்கள் வறுமைக்கோட்டிற்கும் கீழ் இருக்கும் மக்களாகவே உள்ளனர்.

எனவே இந்த சிக்கலான பிரச்சனையைக் கட்டுப்படுத்த வேண்டியதும், குறைபாட்டினை சுட்டிக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில்

நுகர்வோர் கல்வி அமைய வேண்டுவதும், நுகர்வோரின் ஈடுபாட்டை செயல்படுத்தி நுகர்வோர்களின் ஆதரவினைக் கட்டாயம் உருவாக்க வேண்டியதும் மிகவும் அவசியமாகிறது.

நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களின் வளர்ச்சி துண்டு துண்டான நிலையிலும், ஒழுங்கு முறையற்றதாகவும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத சட்டங்களாகவும் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே இருந்தது. மலிவான தரமற்ற பொருட்களை சங்கைப்படுத்துதலுக்கு, மலிவான தள்ளுபடி மற்றும் இலவசப்பரிசு முதலானவைகள் காரணமாகிறது.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் வேலை வாய்ப்பின்மை, ஏழ்மை, கல்வியறிவின்மை மக்கட்தொகைப் பெருக்கம் முதலானவை தவிர்க்க இயலாததாகும். பல்வேறு சட்டங்கள் நடைமுறையிலிருந்த பொழுதிலும் அவைகளால் நுகர்வோர்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல் தொடர்பான எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இயலவில்லை.

இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872, பொருட்கள் விற்பனைச் சட்டம் 1930, அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955, மருந்துகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 1950, உணவுக் கலப்படத் தடைச்சட்டம் 1954, எடை மற்றும் அளவுகள் தரச்சட்டம் 1976 மற்றும் ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வியாபார முறைச்சட்டம் 1969 முதலான பல்வேறு சட்டங்கள் நடைமுறையிலிருந்தன.

இவ்வாறாக எல்லாவித சட்டங்களிலும் தீர்வுகள் பெற இயலுமெனினும், அவைகள் அதிக செலவுள்ளதாகவும், கால தாமதத்தினை ஏற்படுத்துவதாகவும் இருந்ததால் மிகவும் அரிதாகவே நுகர்வோர்கள் அவற்றைக் கையாண்டனர்.

இந்திய அரசியல் சாசனவிதி 38 மற்றும் 47 மக்கள் நலம், ஊட்டச்சத்துள்ள உணவின் தரநிலையை உயர்த்துதல், பொருளாதார வளர்ச்சி மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்



முதலானவற்றை முழக்கமாகக் கொண்டிருந்தபோதிலும் அவைகள் அரசின் நெறிமுறைக் கோட்பாட்டின்கீழ் வருவதால் அரசுக்கான வழிகாட்டுதல்களாக மட்டுமே அமைந்துள்ளன.

இவ்வாறான செயலாக்கம் இல்லாத குறைபாடுகளைக் களைவதற்காக இந்திய பாராளுமன்றத்தில் 1986ம் வருடம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு 1—7—1987 முதல் அச்சட்டம் அமலுக்கு வந்தது.

இந்த சட்டம் விரிவானதும், நுகர்வோர் குறைகளை எளியமுறையில் விரைவாகவும், குறைந்த செலவிலும் தீர்வுகாண இயற்றப்பட்ட கூடுதல் சட்டமாகும்.

ஒவ்வொரு மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நுகர்வோர் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்திட ஏதுவாக நுகர்வோர் நிதியம் ஏற்படுத்தப்பட்டது. பொருட்கள் மட்டுமல்லாது சேவைகளும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டது.

சிறிதளவு மாற்றங்கள் மற்றும் சேர்க்கைகளுடன் 1993ம் வருடம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கவும், நுகர்வோர் கல்வியை பரப்புவதற்காகவும் நுகர்வோர் நலநிதி 1994ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

சுருக்கத்தில் கடந்த பத்து ஆண்டுகளில் நடுத்தர மற்றும் உயர்தட்டு மக்களிடையே நுகர்வோர் இயக்கம் வளர்ச்சி கண்டிருந்தாலும், கிராமப்புற மற்றும் கீழ்த்தட்டு மக்களையும் இச்சட்டம் விரைவில் சென்றடையும் நாள் வெகுதொலைவில் இல்லை.

**ஏ. முடிவுரை: (CONCLUSION)**

20ம் நூற்றாண்டின் விடியல் அணுகுண்டு வெடிப்புக்கள், விண்வெளிப் பயணங்கள் மட்டுமல்லாது, பலதரப்பட்ட பொருட்கள் மற்றும் விரிவான சேவையினையும் கண்டிருக்கிறது.

நுகர்வோர் நலனில் சிறிதும் அக்கறையற்ற, நேர்மையற்ற வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களால் நுகர்வோர்கள் சுரண்டப்படுவதும் பெருகியது.

எல்லாவிதமான தீயசெயல்கள் மற்றம் தீங்குகளையும் முடிவுக்கு கொண்டு வர, உலகின் அனைத்து நாடுகளும், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்ற வடிவிலான கடுமையான சட்டம் கொண்டுவந்தன. இதுவே அதிகளவில் மக்களின் தரமான வாழ்க்கைக்கான குறிப்பிடத்தக்க சட்டப் பூர்வ வளர்ச்சியாகும்.

## மாதிரி வினாக்கள்

1. நுகர்வோர் இயல் மற்றும் இந்தியாவில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்க வளர்ச்சியின் தோற்றத்தினை விளக்குக
2. சர்வதேச அளவில் நுகர்வோர் இயலின் பரிணாம வளர்ச்சியையும் குறிப்பாக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் இதன் வளர்ச்சி குறித்து விளக்குக.
3. நுகர்வோர் பாதுகாப்பினை விளக்கி இந்தியாவின் நுகர்வோர் இயலின் வளர்ச்சியினை அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளுடன் ஒப்பீடு செய்க
4. நுகர்வோர் பாதுகாப்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பங்கினை விளக்கிடுக.
5. நுகர்வோர் இயல் இந்தியாவில் தாமதமாக தோன்றி, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளைப் போல் வளர்த்திருக்கவில்லை– கருத்துரை வழங்குக.
6. இந்தியாவில் நுகர்வோர் இயக்கம் மெதுவாக வளர்ந்தமைக்குக் காரணங்கள்– திறனாய்வு செய்க.